**தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில்**

**பேரறிஞர் அண்ணா அவர்களின் 106வது ஆண்டு பிறந்தநாள் விழா**

**உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்க்கு**

**பேச்சுப் போட்டி– கட்டுரைப் போட்டி–கவிதை ஒப்பித்தல் போட்டிகள்**

தளபதி **மு.க.ஸ்டாலின்** அறிவிப்பு

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு தி.மு.க இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் பேச்சுப்போட்டி – கட்டுரைப் போட்டி – கவிதை ஒப்பித்தல் ஆகிய போட்டிகள் ஆண்டுதோறும் எழுச்சியோடு நடைபெற்று வருவதைத் தொடர்ந்து, இந்த ஆண்டு 106வது பிறந்தநாளினையொட்டி, தமிழகம் முழுவதும் உள்ள உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் பங்குபெறும் பேச்சு, கட்டுரை, கவிதை ஒப்பித்தல் ஆகிய போட்டிகள் ஏழாவது ஆண்டாக நடத்தப்பட உள்ளது.

தமிழகத்தில் உள்ள மாவட்ட தலைநகரங்களில் அக்டோபர் 11, 12 (சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் முதல் கட்டமாகவும், அக்டோபர் 18, 19 (சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் இரண்டாவது கட்டமாகவும் முதல்நிலைப் போட்டிகள் நடைபெறும்.

## பேச்சுப்போட்டி

தலைப்புகள் : 1) அண்ணாவின் கனவுகளும், கலைஞரின் செயல்களும்

2) இட ஒதுக்கீடும் திராவிடப் பெருந்தலைவர்களும்

இரண்டு தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பில் 7 நிமிடத்திற்கு மிகாமல் பேச வேண்டும்.

## கட்டுரைப்போட்டி

தலைப்புகள் : 1) மாணவர்கள் நலனில் தி.மு.க.

2) காலத்தால் அழியாத கலைஞர் அரசின் சாதனைகள்

ஆகிய இரண்டு தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பில் 100 வரிகளுக்கு மிகாமல் எழுத வேண்டும். பேனா மட்டும் எடுத்து வரவேண்டும். தாள்கள் போட்டி அறையில் தரப்படும்.

## கவிதை ஒப்பித்தல் போட்டி

1) இன உணர்வும் மொழிப்பற்றும்! எனும் தலைப்பில்
'திருவள்ளுவர் தூங்கிக் கொண்டிருந்தார்' என தொடங்கி
'சூடு எங்கே பிறந்தது? சொரணை எங்கே பிறந்தது?'
என்று முடியும், 17.9.1995 அன்று நடைபெற்ற முப்பெரும்
விழாவில் தலைவர் கலைஞர் அவர்களின்
தலைமைக் கவிதை

2) "புறநானூற்றுத் தாய் – 2" எனும் தலைப்பில்
1955 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய
'காவிரி தந்த தமிழகத்துப் புது மணலில்' எனத் தொடங்கி
'திருமகளே! இந்தப் பூவுலகில்?....' என முடியும் கவிதை

ஆகிய இரண்டு கவிதைகளில் ஏதேனும் ஒரு கவிதையை ஒப்பித்தல் வேண்டும். இசையுடனோ அல்லது ஒப்பனை அணிந்தோ கவிதையை ஒப்பித்தல் கூடாது.

## பரிசுகள்

மாவட்ட அளவில் நடைபெறும் முதல் நிலை போட்டிகள் ஒவ்வொன்றுக்கும்

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ. | 10,000/– |
| இரண்டாம் பரிசு | ரூ. | 5,000/– |
| மூன்றாம் பரிசு | ரூ. | 2,500/– |
| ஆறுதல் பரிசு | ரூ. | 1,000/–வீதம் (பத்து பேருக்கு வழங்கப்படும்) |

அந்தந்த மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் துணையோடு மாவட்டக் கழகச் செயலாளரின் ஒத்துழைப்போடு இப்போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

அந்தந்தப் பகுதியில் வெளிவரும் நாளிதழ்களில் இது குறித்து செய்தி வெளியிடவும், போட்டிகள் தலைப்புகள், ஒப்பிக்க வேண்டிய பாடல்கள், இடம், நேரம் குறித்த விவர அறிக்கையை வேண்டுவோர் பெற்றுக் கொள்ளவும் ஆவன செய்ய வேண்டும். மாவட்ட அளவில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் இதுபற்றிய விவரங்களை நேரில் வழங்க வேண்டும்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் அனைவருக்கும் போட்டிக்குரிய விவரமும், ஒப்பிக்க வேண்டிய பாடல்களும் முழுமையாக அச்சடித்து அனுப்பி வைக்கப்படும். அதிகப் படிகள் தேவையெனில் அதனை ஜெராக்ஸ் பிரதிகள் எடுத்துக் கொள்ளலாம்.

மாவட்ட அளவில் முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெற்றவர்கள் மட்டுமே மாநில அளவிலான இறுதிப் போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவராவர்.

## போட்டியில் பங்கேற்போர் கவனத்திற்கு

1) இப்போட்டிகளில் பங்கேற்க விரும்பும் பள்ளி மாணவ, மாணவியர்கள் தங்களது கல்வி நிலையத்தின் சான்றுகளோடு அந்தந்த மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்களோடு தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2) உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளில் பயிலும் 9, 10, 11, மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் மட்டுமே பங்கேற்கத் தகுதியுடையவராவர்.
3) பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதை ஒப்பித்தல் ஆகிய போட்டிகளில் ஏதேனும் ஒரு போட்டியில் மட்டுமே ஒருவர் பங்கு பெற வேண்டும்.
4) முந்தைய ஆண்டுகளில் மாவட்ட, மாநில அளவில் முதல் மற்றும் இரண்டாம், மூன்றாம் பரிசு பெற்றவர்கள் இந்த ஆண்டு நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள இயலாது.

## மாநில அளவிலான இறுதிப் போட்டிகள்

மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் இரண்டு இடங்களில் தேர்வு செய்யப்பட்ட உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவியர்க்கு போட்டிகள் நடத்தப்பட்டு மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ. | 25,000/– |
| இரண்டாம் பரிசு | ரூ. | 15,000/– |
| மூன்றாம் பரிசு | ரூ. | 10,000/– |
| ஆறுதல் பரிசு | ரூ. | 5,000/– வீதம் (பத்து பேருக்கு வழங்கப்படும்) |

மாநில அளவிலான இறுதிக் கட்ட போட்டிகள் அக்டோபர் 25, 26 (சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறும்.

"அன்பகம்"
சென்னை – 18
நாள் : 18.9.2014

மு.க.ஸ்டாலின்,
நிறுவனர்,
தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை.